**செ. கு. எண்**: 252 **நாள்**: 13.07.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 13.7.2012

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, K.G.L. பெட்ரோல் பங்க் அருகில், **9.7.2012** அன்று எர்ணாவூர், பெருமாள் கோயில் தெருவைச் சேர்ந்த திரு. அரி என்பவரின் மகன் திரு. கார்த்திக் தனது இருசக்கர வாகனத்தில் திருவொற்றியூர் சென்றுக் கொண்டிருந்த போது, எழும்பூரிலிருந்து திருவொற்றியூர் நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டம், பல்லாவரம் கிராமம், ஜி.எஸ்.டி. சாலை, ஷோபா பெட்ரோல் பங்க் எதிரில், **11.7.2012** அன்று சென்னை, குரோம்பேட்டை நாகல்கேணி, ரெட்டை மலை சீனிவாசன் தெருவைச் சேர்ந்த திரு.மோகன் என்பவரின் மகன் திரு.சுப்பிரமணியம் தனது இருசக்கர வாகனத்தில் சென்றுக் கொண்டிருந்த போது, குன்றத்தூரிலிருந்து அஸ்தினாபுரம் நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த இரு சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த கார்த்திக் மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவங்களில் காலமான திரு. கார்த்திக் மற்றும் திரு.சுப்பிரமணியம் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**